

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2053 ஜூலை 14, 2022 புரட்சி 21 முழக்கம் 26 விலை: ரூ.3.00


# உயர்கல்வி அமைச்சர் பொன்முடி – பாராட்டத்தக்க அறிவிப்பு

# ஆளுநர் பட்டமளிப்பு விழா – அரசு புறக்கணிப்பு

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். இரவி தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் அரசியல் பரப்புரை செய்து வருகிறார். அவர் பாஜகவின் பிரச்சார செயலாளராகவே மாறிவிட்டார் போல் இருக்கிறது. ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு திரியைக் கொளுத்தி போடுகிறார். குறிப்பாக பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவை அவர் அரசியல் மேடையாக்கி வருகிறார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மதுரை காமராஜர் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளப் போவது இல்லை என்று தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி செய்தியாளர்களிடம் அறிவித்து இருக்கிறார்.

இந்த அறிவிப்பைப் பாராட்டி வரவேற்கிறோம். தமிழ்நாடு அரசு ஒரு முதுகெலும்புள்ள அரசு என்பதை மீண்டும் உறுதி செய்திருக்கிறது.

அண்மையில் ஆளுநர் கொளுத்திப் போட்டத் தீ, திராவிடம் என்பது பிரிட்டிஷார் கண்டுபிடித்த சொல் என்பதாகும். பிரிட்டிஷார் கண்டுபிடித்ததினாலேயே திராவிடம் என்பது கெட்ட சொல் ஆகிவிடுமா? அதற்கு ஒரு கோட்பாடு இல்லையா? பிரிட்டிஷார் கண்டுபிடித்தார் என்பதற்காக அவர் எல்லாவற்றையும் புறக்கணிக்க வேண்டும் என்று சொல்கிறாரா? இந்தியா என்ற ஒரு நாட்டை உருவாக்கியதே பிரிட்டிஷார் தான் இந்தியாவை கலைத்து விடலாமா? ஆளுநர் மாளிகை, ஆளுநர் பதவி இவைகளையும் பிரிட்டிஷ்காரர்கள் தான் உருவாக்கினார்கள். ஆளுநர் பதவியை விட்டுவிட்டு ஊருக்குக் கிளம்ப தயாராக இருக்கிறாரா ஆர்.என். ரவி?

அரசியல் சட்டம் 1935ஆம் ஆண்டு பிரிட்டிஷ்காரர்களால் உருவாக்கப்பட்டது. அந்த சட்டத்தின் பல கூறுகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்கப்பட்டிருக்கின்றன. அதற்காக அரசியல் சட்டத்தை வேண்டாம் என்று ஒதுக்கி விட முடியுமா ? பள்ளிக் கல்வி முறையை உருவாக்கியது பிரிட்டிஷ்காரர்கள், நாடாளுமன்றம், ஜனநாயகம் என்ற கோட்பாடுகளை உருவாக்கியது பிரிட்டிஷ்காரர்கள், பிரிட்டிஷ்காரர்கள் வந்த பின் தான் திராவிடம் என்ற சொல் வந்ததா ? அதுவும் உண்மையில்லை. மனுதர்மத்திலேயே திராவிடம் என்ற சொல் இருக்கிறது. திருஞானசம்மந்தரே ‘திராவிட சிசு’ என்று போற்றப்பட்டு இருக்கிறார்.

திராவிடம் நிலத்தைக் குறிப்பது என்கிறார் ஆளுநர். ஆனால், ஆர்.எஸ்.எஸ். தத்துவத்தை உருவாக்கிய கோல்வாக்கர், தங்களை ஆரியர் என்றும், உலகம் தோன்றிய காலத்திலிருந்தே இருந்து வரும் அநாதியர்கள் என்றும், இது வரலாற்று ஆசிரியர்களுக்கே தெரியாது என்றும் கூறுகிறார். (ஆதாரம்: ‘சிந்தனைக் கொத்து’ நூல்)

இந்த வரலாறுகளையெல்லாம் தெரியாமல் வாய்க்கு வந்தபடி ஆளுநர் என்ற அதிகாரத்தை பயன்படுத்தி உளறிக் கொட்டி தமிழ்நாட்டில் திமுகவிற்கு எதிரான பாஜகவின் பரப்புரை செயலாளராக ஆளுநர் மாறி நிற்பது வன்மையான கண்டனத்திற்கு உரியது. இந்தப் பட்டமளிப்பு விழாவை புறக்கணித்திருப்பதாக உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி கூறியிருப்பதை சுயமரியாதையுள்ள தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் நிச்சயமாக வரவேற்பார்கள்.

## ஆளுநர் தமிழிசைக்கு - தீட்சதர்களின் அவமதிப்பு

தில்லை நடராசர் தரிசனத்திற்கு ஆளுநர் தமிழிசை சென்றிருக்கிறார். அங்கே கோவில் படிக்கட்டில் அவர் அமர்ந்திருக்கிறார். தீட்சதர் ஒருவர் வந்து நீங்களெல்லாம் இங்கே உட்காரக் கூடாது என்று அவரை அவமானப்படுத்தி இருக்கிறார். இதை தமிழிசையும் ஒப்புக் கொண்டிருக்கிறார். ‘அப்படி ஒரு தீட்சதர் கூறியது உண்மைதான். ஆனால் அந்த இடத்தை விட்டு நான் நகரவில்லை, அங்கே தான் அமர்ந்திருந்தேன். தீட்சதர்கள் பிரச்சனையை தீர்க்கப்போனால் அவர்கள் பிரச்சனையை உருவாக்கிக் கொண்டே இருக்கிறார்கள்’ என்று ஒரு பேட்டியிலே கூறியிருக்கிறார். வந்தவர் ஒரு ஆளுநர். ஆனால் தில்லைக் கோவிலில் ஆளுநரை விட அதிகாரம் படைத்தவர்கள் தீட்சதப் பார்ப்பனர்கள். கோவிலுக்குள் எந்த சட்டமும் செல்லாது என்று உச்சநீதிமன்றத்திலே அவர்கள் தீர்ப்பை வாங்கி வைத்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் பாஜகவின் தலைவராக இருக்கக் கூடிய அண்ணாமலை, தமிழிசைக்கு ஏற்பட்டிருக்கிற இந்த அவமானம் பற்றி ஒரு வார்த்தை கூட பேசவில்லை. மாறாக இதிலும் தமிழ்நாடு அரசை குறை கூறி ‘சம்பவம் நடந்தது உண்மையா என்று விசாரிக்க வேண்டிய பொறுப்பு தமிழ்நாடு அரசுக்குத் தான் உண்டு என்று தமிழ்நாடு அரசை குற்றம் சாட்டிக் கொண்டிருக்கிறார். தமிழிசைக் கூறியதைக் கூட அவர் நம்புவதற்கு தயாராக இல்லை. இது ஒரு பக்கம் இருக்கட்டும்.

ஆகமக் கோவில்களில், இன்றைக்கும் பெண்கள் அர்ச்சகர்களாக அனுமதிக்கப்படுவ தில்லை. அவர்கள் என்னதான் வேத சாஸ்திரங்களை கரைத்துக் குடித்திருந்தாலும் கூட பெண்களுக்கு அந்த அனுமதி கிடையாது. அவர்கள் தீட்டு பட்டவர்களாகவே கருதப்படு கிறார்கள். சமூகத்தில் சரி பாதியாக இருக்கக் கூடிய பெண்களை ஒரு மதம் இன்னும் தீண்டப்படாத வர்களாக கோவில் வழிபாடுகளுக்குள் ஒதுக்கியே வைத்துள்ளது. சபரிமலை கோவிலுக்குள் பெண்கள் போகலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்த பிறகும் கூட அதை நிறைவேற்ற முடியாத அளவிற்கு பார்ப்பன அதிகார செல்வாக்கு நாட்டில் கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கிறது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் கூட இன்னமும் பெண்கள் உறுப்பினர் ஆக முடியாது. அதன் முன்னணி அமைப்புகளில் வேண்டுமானால் பெண்கள் ‘துர்கா வாகினி’ அமைப்பில் சேர்ந்து துப்பாக்கிப் பயிற்சி எடுக்கலாம். ஆனால், சுயம் சேவக்குகளாக பெண்கள் வர முடியாது. இன்று வரை அந்த தடை நீடித்துக் கொண்டிருக்கிறது. சாகாக்களில் நீங்கள் பார்க்க முடியும், எந்த ஒரு பெண்ணும் சாகாவில் அணிவகுத்து வருவதற்கான வாய்ப்பே கிடையாது.

வாடிகன் நகரத்தில், 86 வயது நிறைந்த போப் கடந்த வாரம் ஒரு பேட்டியை அளித்திருக்கிறார். “வாடிகனில் தங்களுடைய கிறிஸ்துவ மதத்தில், பெண்களுக்கு உயரிய பதவியையும், சம உரிமைகளையும் வழங்குவதற்கு தாங்கள் தயாராகி விட்டதாகவும், அதற்கான புதிய சட்டங்களை உருவாக்கி விட்டதாகவும்” அவர் கூறியிருக்கிறார். “இனி வாடிகன் போப்பைத் தேர்வு செய்யும் குழுவில் இதுவரை ஆண்கள் மட்டும் தான் இருந்து வந்திருக்கிறார்கள். இப்போது பெண்களும் அந்தக் குழுவில் இடம் பெறுவார்கள். பெண்களும் போப் ஆகின்ற உரிமை விரைவில் வந்து சேரும்” என்று அவர் கூறியதோடு தன்னுடைய நிர்வாகத்தில் உயர் பதவிகளில் பெண்களை நியமித்து வருவதாகவும் தற்போது வாடிகனில் இரண்டு பெண்கள் அறிஞர்களாக இருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

கிறிஸ்துவ மதம் காலத்தின் தேவைக்கேற்ப தன்னை வளர்த்துக் கொண்டு பெண்களுக்கு சம உரிமை வழங்குவதற்கு முன் வருகிறது. அந்த மதம் இந்த நாட்டில் இந்துக்களின் பார்வையில் தேச விரோத மதம். ஆனால், சமூகத்தில் சொந்த இந்து மதத்தில் சரி பகுதியாக இருக்கக் கூடிய பெண்களை கவர்னராக இருந்தாலும் அவமானத் துள்ளாக்குவது வேத மதம்; வைதீக மதம்.

# இஸ்லாமியர்களைப் புறக்கணிக்கும் மோடியின் ‘இந்துத்துவ’ இந்தியா

பக்ரீத்துக்கு வாழ்த்துக் கூறிய பிரதமர் மோடி, இந்தியாவில் மதவேறுபாடின்றி மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருப்பதாகப் பேசியிருக்கிறார். இஸ்லாமியர் என்றாலே அவர்களை ‘தேச விரோதி’ களாகப் பார்க்கும் வெறுப்பை வளர்ப்பதே ஒன்றிய - மாநில பா.ஜ.க. ஆட்சிகளின் முதன்மை இலட்சியமாக இருக்கிறது என்பதை உலகமே பார்த்துக் கொண்டிருக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களில் முஸ்லீம் ஒருவரைக்கூட பா.ஜ.க உறுப்பினராக்கவில்லை. அண்மையில் மாநிலங்களவையில் பதவிகள் முடிந்த நிலையில் ஒருவர்கூட இஸ்லாமியர் இல்லை என்ற நிலையில் பா.ஜ.க. ஒரு இஸ்லாமியரைக்கூட நியமன உறுப்பினராக்கத் தயாராக இல்லை.

இந்தியாவில் முஸ்லீம்கள் மக்கள் தொகையில் 15 சதவீதம் பேர். ஆனால் மத்திய மாநில அரசுப் பணிகளில் பணியாற்றுவோர் 4.9 சதவீதம் பேர் மட்டுமே.

துணை இராணுவப் பிரிவுகளில் 4.6 சதவீதம்; அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ். பதவிகளில் 3.2 சதவீதம்; வெளிநாட்டுத் துறை, இந்தியன் போலீஸ் சர்வீஸ் போன்ற துறைகளில் ஒரு சதவீதத்துக்கும் குறைவு. மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி முஸ்லீம்கள் நாடாளுமன்றத்தில் 74 பேர் இடம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் இப்போது இடம் பெற்றிருப்பது 27 பேர் மட்டுமே. 28 மாநிலங்களில் ஒருவர்கூட முதலமைச்சராக இல்லை. 18 மாநிலங்களில் ஒரு முஸ்லீம் அமைச்சர்கூட இல்லை. 10 மாநிலங்களில் ஒரே ஒரு முஸ்லீம் அமைச்சர் மட்டுமே இருக்கிறார்.

2014–2019 நாடாளுமன்றத் தேர்தல்களில் பா.ஜ.க. சார்பில் ஒரு முஸ்லீம் வேட்பாளர்கூட நிறுத்தப்படவில்லை. 1998ஆம் ஆண்டிலிருந்து குஜராத் மாநிலத்தில் சட்டமன்றத்துக்கோ, நாடாளுமன்றத்துக்கோ, ஒரு முஸ்லீம் வேட்பாளரைக்கூட நிறுத்தவில்லை. இத்தனைக்கும் அம்மாநிலத்தில் 9 சதவீதம் பேர் இஸ்லாமியர்கள். (ஆதாரம்: ஆக்கர்பட்டேல் எழுதிய ‘நமது இந்து ராஷ்டிரம்’ நூல்)

தலையங்கம்

## ஆன்மீகத்துக்குள் பதுங்கி நிற்கும் ஆரியம்!

‘ஆன்மீகம்’ என்ற சொல் சனாதன வாதிகளால், மதவாதிகளால், மக்களை கூறுபோடுகின்ற ஜாதியவாதிகளால் பயன்படுத்தப் படுகின்ற ஒரு சொல்லாக மாறிப்போய் இருக்கிறது. உண்மையில் ஆன்மீகம் என்றால் என்ன என்பது பற்றி திருவண்ணாமலையில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒரு தெளிவான விளக்கத்தை தந்திருக்கிறார்.

“ஆன்மீகம் என்ற சொல்லை இன்றைக்கு அரசியலுக்குப் பயன்படுத்த முயற்சிக்கிறார்கள். ஜாதியைக் காட்டி, மதத்தைக் காட்டி மக்களைப் பிளவு படுத்துவதற்கு ஆன்மீகத்தை பயன்படுத்துகிறார்கள். நாங்கள் ஆன்மீகத்துக்கு எதிரிகள் அல்ல, ஆனால் இப்படி மக்களை பிளவுபடுத்த ஆன்மீகத்தை பயன்படுத்துகிறவர்களுக்கு நாங்கள் எதிரிகள் என்று அவர் கூறியிருப்பதோடு ஆன்மீகம் என்ற சொல்லுக்கு அறநெறி என்ற அழகிய தமிழ்ச் சொல்லையும் அவர் பயன்படுத்தியிருக்கிறார்.

முதலில் ஆன்மீகம் என்பது தனிமனிதர் சார்ந்ததா? சமூகம் சார்ந்ததா? என்ற கேள்விக்கு விடைகாண வேண்டும். உறுதியாக தனி மனிதன் சார்ந்தது தான். ஒரு மனிதர் (ஆணோ அல்லது பெண்ணோ) தன்னுடைய அறநெறி வாழ்க்கையை தனக்குள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். அதற்காக தன்னை பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த இலக்கில் உயர்வான பண்புகளை வளர்த்துக் கொள்வதை நோக்கி பயணிப்பது தான் மதவாதிகள் மொழியில் ஆன்மீகம்; நம்முடைய மொழியில் அறநெறி. பெரியார் கூறிய அறநெறி என்ன? மனிதராகப் பிறந்து விட்டால் மானுடத்துக்கு தொண்டு செய்வதே உயர்ந்த மானுடத்தின் பெருமைக்குரிய அடையாளம். இது பெரியாரின் ‘ஆன்மீகம்’; அறநெறி. அதாவது, பகுத்தறிவு அறநெறி; உண்மையில் ஆன்மீகம் மதவாதிகளுக்கு மட்டுமே உரித்தானது அல்ல; அப்படி மாற்றிக் கொண்டு விட்டார்கள்.

ஆனால், பக்தியின் பெயரால் ஆன்மீகம் என்ன செய்து கொண்டிருக் கிறது ? வர்ணாசிரம தர்மத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது. புறத் தோற்றத்தில் அடையாளங்களை வைத்திருக்கிறது. காவி உடை உடுத்தியிருக்க வேண்டும், மத சின்னங்களை அணிய வேண்டும் இவைகள் ஆன்மீக அடையாளம் என்று கூறுகிறது. மற்றொரு பக்கம் கார்ப்பரேட் ஆன்மீகம் வணிகம் நடத்திக் கொண்டிருக்கிறது. ராம்தேவின் பதஞ்சலி வியாபாரம், பன்னாட்டு சந்தையில் வியாபாரம், ஸ்ரீ ரவிசங்கரின் தியான பயிற்சி அந்த தியான பயிற்சிக்கு உலகம் முழுவதும் பயிற்சி நிலையங்கள் என்று வியாபாரம் நடத்துகிறது. வெளிநாடுகளில் தீவு வாங்கி வைத்துக் கொண்டு தனி ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற நித்யானந்தா போன்ற சாமியார்கள் ஆன்மீகவாதிகளாகத் தங்களைக் கூறிக் கொண்டிருக் கிறார்கள்.

சனாதனவாதிகள் இதை எதிர்ப்பதில்லை; வாய்மூடிக் கிடக்கிறார்கள். எந்தப் போர்வையில் எத்தகைய மோசடிகளுடன் மதம் வந்தாலும் அது, பார்ப்பன மேலாதிக்கத்தை நிலைநாட்டவே பயன்படும் என்று உறுதியாக நம்புகிறார்கள்.

பக்தர்கள் அதிகமாக வரும் கோவில்களின் நகரங்களைக்கூட ஆன்மீக நகரம் என்று பெயர் சூட்டக் கிளம்பிவிட்டார்கள்.

மட்டுமின்றி, வைதீக மதம் ஆன்மீகத்தை ‘ஆன்மா’வுடன் தொடர்பு படுத்துகிறது. புற உலக வாழ்க்கை மெய்மை அல்ல; மறு உலக வாழ்க்கையே ‘நிஜம்’ என்கிறது. மறு உலகத்தில் மோட்சம் அடைய இவ்வுலகில் சனாதன தர்மங்களின் கட்டளைகளை ஏற்று வாழ வேண்டும் என்கிறது. கீதையும் இதைத்தான் போதிக்கிறது.

புத்தர் இதில் சற்று மாறுபட்டார். உடல் இறக்கிறது என்றாலும், உடலின் மூலக் கூறுகள் விண்ணுலகில் மூலக் கூறுகளுடன் இணைந்து விடுகிறது என்பதே புத்தரின் கருத்து என்று ‘புத்தமும் தம்மமும்’ நூலில் அம்பேத்கர் விளக்குகிறார். ஆனாலும் மதத்தின் மய்யப் புள்ளி, மனிதனுக்கும் கடவுளுக்குமான உறவாக இருக்கக் கூடாது. அது மனிதருக்கும் மனிதருக்குமான உறவு பற்றியதாகவே இருக்க வேண்டும் என்ற ஆழமான சிந்தனையை முன் வைத்தார் புத்தர். (ஆதாரம்: புத்தமும் தம்மமும்) இது புத்தரின் ‘ஆன்மீகம்’.

இப்போது ஆன்மீகத்தை கட்சி அரசியலுக்கு தேர்தல் அரசியலுக்கும் இழுத்துக் கொண்டு விட்டார்கள்.

ஆன்மீகத்துக்கும் அரசியல் கட்சிக்கும் தொடர்புபடுத்துவதே அபத்தம். இந்துத்துவ அரசியலுக்கும் பிற மதங்களை வெறுப்பதற்கும், பகுத்தறிவாளர்களை எதிர்ப்பதற்கும் தான் ‘ஆன்மீக அரசியல்’ பயன்படுத்தப்படுகிறது. பா.ஜ.க. இப்போது நடத்துவதுதான் ஆன்மீக அரசியலா? என்று கேட்கிறோம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை கட்சி மாறல் தடைச் சட்டத்தைப் புதைக்குழியில் புதைத்துவிட்டு, கட்சி மாறச் செய்து ஆட்சியை அமைப்பதும், மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிப்பதும், சமூக ஒழுக்கக் கேடர்களை கட்சிகளில் பொறுப்புகளில் அமர்த்துவதும் தான் ஆன்மீக அரசியலா?

இப்போது ஆன்மீகம் என்பது ஆரியம் விரிக்கும் சூழ்ச்சி வலை. மதம் மற்றும் ஜாதிப் பிளவுகளைக் கூர்மைப்படுத்த நடத்தும் ‘சாணக்கிய’ அரசியல்.


# ரிக்வேதம் - வேதக் கணிதப் பெருமை: கருநாடக அரசின் மதவெறி பாடத் திட்டம்

மோடி அரசு கொண்டுவந்துள்ள புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்தவும், இந்துத்துவா அடிப்படையில் பாடத்திட்டங்களை உருவாக்கவும் கர்நாடக அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகின்றது. அண்மையில், மகாத்மா காந்தி, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் மற்றும் ஜவஹர்லால் நேரு பற்றிய பாடங்களை நீக்கி விட்டு, ஆர்எஸ்எஸ் சித்தாந்தவாதிகளான கே.பி. ஹெட்கேவார் மற்றும் விநாயக் தாமோதர் சாவர்க்கர் ஆகியோர் பற்றிய பாடங்களை அது சேர்த்தது. இந்நிலையில்தான், கிரேக்கக் கணித வியலுக்குப் பதிலாக, இந்தியாவில் தோன்றிய வேதக்கணிதத்தை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்றும், நியூட்டன் மற்றும் பிதாகரஸ் ஆகியோரின் கண்டு பிடிப்புக்கள் என்று கூறப்படுபவை இந்தியாவில் வேதக் காலத்திலேயே கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது என்றும் புதிய சர்ச்சை யை கர்நாடக பாஜக அரசு கிளப்பியுள்ளது. ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்த கர்நாடக மாநில பாஜக அரசு 26 கல்விக்கொள்கைக் குழுக்களை அமைத்தது. வாரணாசியில் உள்ள ஐஐடி-யின் பேராசிரியர் வி.ராமநாதன் தலைமையிலான இந்தக் குழுக்கள், தேசியக் கல்விக் கொள்கையின் கீழ் பாடத்திட்டக் கட்டமைப்பு மற்றும் மாநிலப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்களை ஆராய்ந்து, அதுதொடர்பான பரிந்துரைகளை அரசுக்கு வழங்கியிருக்கிறது. அதில், கூறப்பட்டிருப்ப தாவது:

ஐரோப்பாவில் தோன்றிய கணிதக் கருத்துக்களுக்கு மாறாக, பண்டைய ‘பாரதத்தில்’ இருந்து கணிதக் கருத்துகளை ஒருங்கிணைக்க வேண்டும். ‘வேகமான மனக் கணக்கீட்டிற்கு’ வேதக் கணிதத்தின் ‘சில சூத்திரங்களை’ அறிமுகப்படுத்த வேண்டும். பூதசாம்கியா என்பது சமஸ்கிருதத்தில் பொதுவான பெயர்ச் சொற்களைப் பயன்படுத்தி எண்களைப் பதிவு செய்யும் முறையாகும். எளிதில் நினைவுகூருவதற்கான எண் குறியீட்டைக் கொண்டது கடாபயாதி அமைப்பு ஆகும். அந்த வகையில், மனுஸ்மிருதி மற்றும் பூதசங்கியா, கடாபயாதி சங்கியா போன்ற புராதன எண் முறைகளை மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் அறி முகப்படுத்த வேண்டும். கிரேக்க கணித வியலாளர்களான பிதாகரஸ் மற்றும் ஹெரான் ஆகியோரின் கண்டுபிடிப்பு தொடர்பான சித்தரிப்புகளை அகற்ற வேண்டும். கிரேக்கக் கணிதம் பற்றிய பிரிவுகள் குறைக்கப்பட வேண்டும், பிதாகரஸ் தேற்றம் மற்றும் ஆப்பிள் தலையில் விழுந்ததை வைத்து நியூட்டன்தான் புவி ஈர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார் என்று கூறப்படுபவை எல்லாம் தவறான தகவல் களாகும். இவையெல்லாம் வேத காலத்திலேயே உருவானதாகும்.

உலகின் பழமையான மற்றும் பழமை யான இலக்கியம் என்று உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ‘ரிக்’ வேத காலத்திலிருந்தே நமது நாகரீகத்தில் ஆழ்ந்த விசாரணை மற்றும் பகுப்பாய்வு உணர்வு வேரூன்றியிருக்கிறது என்ற மறுக்க முடியாத உண்மையை நமது மாணவர்கள் அறிந்துகொள்ளவும், ஒருங்கிணைக்கவும், பாராட்டவும் கூடியதாக நமது பாடப்புத்தகங்கள் இருக்க வேண்டும். சமஸ்கிருதத்தை மூன்றாம் மொழியாக கட்டாயம் சேர்க்க வேண்டும். ஆயிரக்கணக் கான மொழிகள் உள்ள நாட்டில், குறைந்தது மூன்று மொழிகளாவது கற்பிக்கப்பட வேண்டும். அதாவது, மாநில மொழியுடன் ஆங்கிலம் மற்றும் மூன்றாவது பாரதிய மொழி கற்பிக்கப்பட வேண்டும். அந்த மூன்றாவது பாரதிய மொழியில், சமஸ்கிருதத்திற்கு முன்னுரிமை தர வேண்டும். சமஸ்கிருதம் என்பது பெரும் பான்மையான இந்திய அறிவைக் கொண்டி ருக்கும் மொழியாகும். மேலும் சமஸ்கிரு தத்தின் அடிப்படை அறிவு வெளிநாட்டு மொழிகள் உட்பட வேறு எந்த மொழியையும் தேர்ந்தெ டுக்க மாணவர்களை தயார்ப்படுத்தும். இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது. இதற்கு கல்வியாளர்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. கல்வியாளர் நிரஞ்சனாராதியா இந்த மாற்றங்களை அறிவியலற்றது மற்றும் பிற்போக்குத்தனமானது என்று விமர்சித்துள் ளார். “அறிவியல் மற்றும் சமூக அறிவியல் போன்ற பாடங்களில் பல பிற்போக்கு மாற்றங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. புராணக் கதை களை அடிப்படையாகக் கொண்ட இந்த வாதங்கள் அறிவியலற்றவை என்று ஏற்கெனவே அறிஞர்களால் நிரூபிக்கப்பட்டு விட்டன” என்று நிரஞ்சனாராத்யா குறிப்பிட்டுள்ளார்.

## சமுதாயத்துக்குப் பயன் தரும் வாழ்வே சிறந்த இலட்சியம்



என்னைப் பொறுத்தவரை நான் கூறுவேனாகில், மனிதப் பிறவியானது ஒரு இலட்சியமற்றப் பிறவி என்றே கூறுவேன். மனிதன் பிறக்கிறான் ; பற்பல எண்ணங்களை எண்ணுகிறான்; பல வகைகளை இச்சிக்கிறான்; எவ்வளவோ காரியங்களில் விருப்பம் கொண்டு அவைகளை நிறைவேற்ற முற்படுகிறான்; ஒரு சிலவற்றில் ஆசை நிறைவேறுகிறது; மற்றவைகளில் ஏமாற்றம் அடைகிறான் ; இறுதியில் செத்துப் போகிறான். மனிதன் பிறந்தது முதல் செத்துப்போகும்வரை இடையில் நடைபெறுகிறவைகள் எல்லாம் அவனின் சுற்றுச்சார்பு, பழக்கவழக்கம் இவைகளைப் பொறுத்து நடக்கின்றன. எனவே, மனித வாழ்வு இலட்சியமற்ற வாழ்வு என்பது என் கருத்து. சமுதாயத்துக்குப் பயன்தரும் வாழ்க்கையே சிறந்த இலட்சியம். மனிதன் பிறந்து இறக்கும் வரை இடையில் உள்ள காலத்தில் ஏதாவது பயனுள்ள காரியம் செய்ய வேண்டும். அவன் வாழ்க்கை மற்றவர் நலனுக்கும், சமுதாயத்தின் சுகத்திற்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டும். ஒருவன் வாழ்வதென்பது அவனுடைய வாழ்க்கையால் பிறர் நன்மையடைந்தார்கள், மற்றவர்கள் சுகம் கண்டார்கள் என்று அமைய வேண்டும். இது முக்கியமானதாகும், இதுவே அவசியமும் பொருத்தமும் ஆனதுமின்றி மனித வாழ்க்கை என்பதன் தகுதியான இலட்சியம் இது என்று கூறலாம்.

**– விடுதலை – 21.03.1956**

## தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா விளக்கம் (2)

# அரசியல் சட்டத்தில் மாநில சுயாட்சி இடம் பெறாமல் போனது ஏன்?

***அரசியல் சட்டத்தில் மாநிலங்கள் உரிமைகளைத் தடுத்தது வரலாற்றுப் பின்னணியை விளக்கி ஆ. ராசா நிகழ்த்திய உரை. கடந்த இதழ் தொடர்ச்சி.***

*1974இல் கலைஞர் முதலமைச்சர். மாநில சுயாட்சி தீர்மானத்தை நிறைவேற்றி பிறகு, இராஜபாளையத்தில் திமுக மாவட்ட மாநாடு நடைபெறுகிறது. திமுகவின் தலைவராக, ஆட்சியின் தலைவராக கலைஞர் அங்கே போகிறார். போகிற வழியில் அவருடைய படம், முஜிபூர் ரகுமானுடைய படம் இரண்டு படத்தையும் வைத்து வருக வருக என்று சுவரொட்டி, பதாகைகள் வைத்தார்கள். உடனே கம்யூனிஸ்ட் கட்சி உட்பட காங்கிரசும் கூறினார்கள், கலைஞர் பிரிவினைவாதியாக மாறி விட்டார். ஏன் அண்ணா படம் அங்கே இல்லை? ஏன் பெரியார் படம் அங்கே இல்லை ? ஏன் அங்கே முஜிபூர் இரகுமான் படம் ? ஏனென்றால் முஜிபுர் ரகுமான் தான் கிழக்கு பாகிஸ்தானை பிரித்தவர்.*



*அரசியல் சட்டத்தை சுயாட்சி அடிப்படையில் உருவாக்க விரும்பியவர்கள் பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு தங்களது நிலையை தலைகீழாக மாற்றிக் கொண்டார்கள்.*

*நண்பர்களே இன்று அமித் ஷா கூறுகிறார். “இந்தி தான் நாட்டை இணைக்கக் கூடிய மொழி. இந்தியா ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றால் இந்தி தான் இருக்க வேண்டும்” என்று உள்துறை அமைச்சர் கூறுகிறார். அவருக்கு கவனப்படுத்துகிறேன், ஒரு மொழி நாட்டை இணைக்குமா ? பாகிஸ்தான் பிரிந்ததே; முஜிபுர் ரகுமான் என்ன கேட்டார் ? பாகிஸ்தானை பெற்றுத் தந்த ஜின்னா, டாக்காவில் பேசுகிறார். கிழக்கு பாகிஸ்தானில் சென்று பேசினார். பேசும்போது உருதுவில் பேசினார். இலட்சக் கணக்கான கூட்டத்தில் இருந்து ஒரு இளைஞன் எழுந்து கூறினான், “எங்கள் மொழி வங்க மொழி; எனவே உருதுவில் பேசினால் எங்களுக்கு எப்படி புரியும்” என்று கேட்டான். ஜின்னா மறுத்தார். அன்றைக்கு தொடங்கியது மொழி அடிப்படையிலான மாநிலம், நாடு எங்களுக்கு வேண்டும் என்று அன்றைக்கு நாடு பிரிந்தது. நாடு அன்றைக்கு பிரிந்ததால் தான் கலைஞரையும், முஜிபுர் ரகுமானையும் இணைத்து போஸ்டர் அடித்தார்கள். எத்தனையோ கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அன்றைக்கு, கலைஞர் முஜிபுர்ரகுமானாக மாறினால் நான் கலைஞர் பக்கம் தான். தமிழ்நாட்டின் சுயாட்சிக்காக நான் மட்டுமல்ல தமிழ்நாட்டில் உள்ள 4 ½ கோடி மக்களும் முஜிபுர் ரகுமானாக மாறுங்கள் என்று கூறினார் மா.பொ.சி. மாநில சுயாட்சி மறுக்கப்பட்ட காரணத்தினால் அன்றைக்கு நாடு பிரிந்தது.*

*சுதந்திரத்தின் போது* Federal government *என்று கூறினார்கள். ஆனால் பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு தனது நிலையை மாற்றிக் கொண்டார்கள். மாற்றிக் கொண்ட பின் என்ன கூறினார்கள், ‘இது ஒற்றை ஆட்சி, நாங்கள் வைத்தது தான் சட்டம். மாநிலங்களுக்கு அதிகாரம் கிடையாது’ என்றார்கள். அரசியல் சட்டத்தில் மாநிலங் களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தைக் கூட இவர்கள் கையிலே எடுத்துக் கொண்டு சட்டம் இயற்றினார்கள்.*

*எதுவரை 1967 வரை. 1967 இல் என்ன ஆனது ? தமிழ்நாடு, மேற்கு வங்கம், பீகார், உத்திரப்பிரதேசம் இப்படி பல்வேறு மாநிலங்களில் காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்கள் வந்த பிறகு, அன்றைக்கு இந்த “மாநில சுயாட்சி” கோரிக்கை திமுக சார்பில் வைக்கப்பட்டது. அதனடிப்படையில் தான் 1974 இல் நீதியரசர் இராஜமன்னார் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, மாநில சுயாட்சி சார்பில் தீர்மானங்களை கலைஞர் நிறைவேற்றினார். இது வரலாறு. தோற்றுவாய்.*

*நான் தற்போது அரசியல் சட்டத்திற்கு வருகிறேன். அரசியல் சட்டத்தின் முதல் பிரிவு என்ன கூறுகிறது ?* ‘India that is Bharath, shall be a union of states’ *அரசியல் சட்டத்தினுடைய முதல் பிரிவு, “இந்தியா அதாவது பாரதம், மாநிலங்களின் ஒன்றியமாக இருக்கும்”. அம்பேத்கர் கூறுகிறார், ‘அரசியல் சபையில்* Union of States *என்று கூறுகிற போது எனக்கு பல எதிர்ப்புகள் இருந்தது’ என்று கூறுகிறார். சொல்லி விட்டு கூறுகிறார். ‘பாரத் என்ற வார்த்தையை நான் உபயோகப்படுத்த விரும்பவில்லை. ஏனென்றால் பாரதம் என்ற வார்த்தை எப்போதும் இருந்தது இல்லை. பாரத தேசத்தை நான் ஒப்புக் கொள்ளவில்லை. ‘என்னுடைய விருப்பத்திற்கு எதிராக பாரதம் என்ற வார்த்தையை கொண்டு வந்து சேர்த்தார்கள்’ என்று அம்பேத்கர் கூறினார். இதை ஏன் கூறுகிறேன் என்றால், இந்தியா ஒரு ஒன்றியம் என்பதை அப்போது இருந்த காங்கிரசில் இருந்த உயர்ந்த ஜாதிக்காரரர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. ஒன்றியம் என்பதை சட்டத்தில் இணைக்கக்கூட அம்பேத்கர் மிக கடுமையான சிரமப்பட வேண்டியிருந்தது. அப்படி வந்த சட்டம்.*

*அரசியல் சட்டத்தை மூன்றாகப் பிரித்தார்கள். மத்திய அரசிற்கான அதிகாரம், அதை* Union List, *அடுத்தது மாநிலப் பட்டியல், மூன்றாவதாக* concurrent List, *இரண்டு பேரும் சட்டமியற்றலாம். இதில் சட்டமன்றமும் சட்டமியற்றலாம், நாடாளுமன்றமும் சட்டமியற்றலாம் ஆனால் எந்த சட்டம் செல்லும் என்றால் நாடாளுமன்றம் இயற்றிய சட்டம் தான் செல்லும். அதன் பிறகு* Residuary Power *எஞ்சிய சட்டங்கள். வேறு எதாவது புதியதாக வந்தால் அதில் யார் சட்டம் இயற்றுவது என்று நான்காகப் பிரித்தார்கள். இப்படி பிரிக்கப்பட்ட போது தான் அதிகமான அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொண்டது. ஏறத்தாழ 97 அதிகாரங்கள் அவர்களிடத்திலே இருக்கிறது. மாநிலங்களிடையே வெறும் 47 தான் இருக்கிறது. இப்படிப் பட்டியல் போட்டால் அனைத்து அதிகாரமும் அவர்களி டத்தில் இருக்கிறது. இதை ஏன் என்று கேட்ட இயக்கம் இந்தியாவிலேயே ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் தான்.*

*நாம் ‘திராவிட நாடு’ கேட்டோம். திராவிட நாடு கேட்டபோது அதை கைவிட வேண்டிய சூழல் 1962 இல் வந்தது. திராவிட நாடு கேட்டபோது நாடு பிரிவினை தடைச் சட்டம் 1962இல் கொண்டு வந்தார்கள். அப்போது அண்ணா நாடாளுமன்றத்தில் என்ன பதிவு செய்தார் ? “எங்களை எதிர்த்து தான் இந்த சட்டம் வருகிறது என்று எங்களுக்குத் தெரியும்.* 'It is a painfull paradox. To bring a law to curtail our Rights' *என்று கூறினார். 'ஒரு நல்ல இலட்சியத்தை தடுப்பதற்காக பிரிவினை தடுப்புச் சட்டத்தை கொண்டு வந்து திமுக வை அழிக்கப் பார்க்கிறீர்கள்” என்று அன்றைக்கு அண்ணா நாடாளுமன்றத்தில் கூறினார். இன்றைக்கு அது வளர்ந்து வளர்ந்து மாநில சுயாட்சியின் கொள்கை அனைத்து மாநிலங்களிலும் உரிமைக் குரலாக எழத் தொடங்கியிருக்கிறது.*

*மாநில சுயாட்சியில் என்ன கேட்கிறோம்? அரசியல் சட்டத்தில் என்ன கூறியிருக்கிறது ?*

*மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையே தனித் தனி அதிகாரம் உள்ளன. ஆனால் என்ன நிலைமை என்றால், ‘நிதியைப் பெறுவதில் ஒரு பிச்சைக்காரரைப் போல் மாநில அரசு உள்ளது’ என்று கலைஞர் கூறினார்.*

*இராஜமன்னார் குழுவின் அறிக்கையின் முகவுரையில் கூறியுள்ளனர், ‘அரசியல் சட்டத்தை எழுதிய மேதைகள், அரசியல் சட்டத்தை வடிவமைத்தவர்களைக் குறை கூறுவதற்காக இந்த அறிக்கை தரப்படவில்லை. அது எங்களுடைய நோக்கமும் அல்ல. நாங்கள் புரிந்து கொள்கிறோம். ஏன் அரசியல் சட்டத்தில் இவ்வளவு குளறுபடிகள் என்றால், ஒரு காரணம், அமெரிக்காவில் 1851 இல் அரசியல் சட்டத்தை சுதந்திரமாக எழுதினார்கள். அப்படிப்பட்ட சுதந்திர சூழ்நிலை இந்தியாவிற்கு இல்லை என்று ஒப்புக் கொள்கிறோம். இரண்டாவது காரணம், பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு அதிக அதிகாரம் மத்திய அரசுக்கு இருந்தால் தான் மற்றொரு நாடு பிரியாமல் இருக்கும் என்று மத்திய அரசு எண்ணியிருக்கக் கூடும். அதுவும் ஒரு காரணம். இது மட்டுமல்ல 1935 (பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவுக்கு உருவாக்கிய சட்டம்) சட்டத்தை எங்கள் முன் வைத்து அதன்படி எழுதுங்கள் என்பதால் அரசியல் சட்டத்தை எழுதியவர்களுக்கு நெருக்கடி இருந்திருக்கக் கூடும் அதனால் அப்படி எழுதியிருக்கக் கூடும்’ எனவே அரசியல் சட்டத்தில் மூன்று குறைகள் உள்ளன.*

*மத்திய அரசிற்கு இரண்டு மூன்று அரசியல் சட்டப் பிரிவுகளில் அதிகப்படியான அதிகாரம் இருக்கிறது. ஒன்று மாநில அரசிற்கு கட்டளைப் பிறப்பிக்கலாம். (257). இரண்டாவது மாநில அரசாங்கத்திற்கு சில கடமைகளை சொல்லலாம். அந்த கடமைகளையும், கட்டளைகளையும் ஒரு மாநில அரசு தவிர்த்தால் அவர்கள் 356ன்படி அரசியல் சட்டப்படி நடக்காத அரசாக பாவித்து குடியரசுத் தலைவர் அதை கலைக்கலாம். எனவே கட்டளை யிடுகிற அதிகாரம் அவர்களுக்கு, கடமையை செய்ய சொல்லும் அதிகாரமும் அவர்களுக்கு அந்த இரண்டையும் தவறினால் ஆட்சி பறிபோகும். எனவே இராஜமன்னார் அறிக்கை என்ன கூறியது என்றால், இந்தப் பிரிவுகளை நீக்குமாறு கோரியது. அந்தப் பிரிவுகளை நீக்குவது மட்டுமல்ல இராணுவம் உங்களிடத்தில் இருக்கிறது. ஆவடியில் டேங்க் தொழிற்சாலை இருக்கிறது, திருச்சியில் துப்பாக்கித் தொழிற்சாலை இருக்கிறது. இதையெல்லாம் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள், டேங்க் எங்களுக்கு வேண்டாம். துப்பாக்கி எங்களுக்கு வேண்டாம். ஆனால் அந்த துப்பாக்கிகளுக்கு உதிரிப் பாகங்கள் இருக்கிறதே ‘நெட், போல்ட்’ அதைக் கூடவா நாங்கள் தயாரிக்கக் கூடாது ? என்று இராமன்னார் அறிக்கை கேட்டது.*

*எண்ணெய் வயல்கள், சுரங்கங்கள் உங்களிடத்தில் இருக்கிறது. நிலம் எங்களிடத்தில் இருக்கிறது. பத்திரப் பதிவுத் துறை இருக்கிறதே அதில் வரும் தொகை மத்திய அரசிற்கு போகிறதா? இல்லை ஏனென்றால் நிலம் மாநில அரசினுடையது. ஆனால் எண்ணெய் வயலும், சுரங்கமும் அவர்களிடத்தில் உள்ளது என்ன நியாயம்? அதே போல் தொல் பொருள். துறையில் கை வைக்க முடியுமா? ஆயிரமாவது சதய விழா இராஜ இராஜனுக்கு நடந்தது. தஞ்சாவூரிலே கலைஞர் கலந்து கொண்டார். இராஜ இராஜன் அந்தக் கோவிலைக் கட்டினான். ஆனால் அவனுக்கு அந்தக் கோயிலில் ஒரு சிலையை வைக்க வேண்டும் என்று கேட்ட போது டெல்லி மறுத்து விட்டது.*

*ஏன் சட்டமன்ற கட்டிடம், கலைஞர் அதிலே மராமத்து பணிகளைப் பார்க்க வேண்டும் என்றார். மத்திய அரசு மறுத்துவிட்டது. தொல்லியல் துறை எங்களிடத்தில் இருக்கிறது. எங்களுக்கு அதிகாரம் கிடையாது என்றது. சின்ன சின்ன உரிமைகள் கூட மாநில அரசுக்கு இல்லை அதை வேண்டும் என்று கேட்டது தான் இராஜமன்னார் அறிக்கை. அவையெல்லாம் இதுவரை நமக்கு கிடைக்கவில்லை. எனவே தான் மாநில சுயாட்சிக் குரலை ஓங்கி ஒலிக்க வேண்டி இருக்கிறது.*

*எவ்வளவோ பேசிவிட்டோம், எழுதிவிட்டோம் இன்றைக்கும் மாநில சுயாட்சி கேட்க வேண்டிய நிலை இருக்கிறது என்றால், நான் மெத்தப் பணிவோடு கூறுகிறேன், இந்த மேடையிலே இருந்து கூறுகிறேன், பிரதமர் கூறுகிறார் அனைத்து மாநிலங்களையும் நாங்கள் ஒன்றாக பார்க்கப் போகிறோம். அமித் ஷா கூறுகிறார் ஒருமைப்பாடு வேண்டுமென்றால் இந்திக்கு வாருங்கள் என்கிறார். இந்த மேடையில் முதல்வர் இருக்கிறார் நாங்கள் ஆளுங்கட்சி என்ற திமிரோடு பேசவில்லை.*

*தனித்தமிழ்நாடு கோரிக்கையை கைவிட்டுவிட்டு திராவிட முன்னேற்றக் கழகம் ‘மாநில சுயாட்சி’ கொள்கைக்கு வந்துவிட்டது. ஆனால்* **எங்கள் தத்துவத்தின் பிதாமகனாக இருக்கக் கூடிய தந்தை**

*(4ஆம் பக்கம்)*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# தொல் தமிழ் அடையாளங்களைப் புறக்கணிக்கும் ஒன்றிய ஆட்சி!

*நாங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள். "உலகத்தின் மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி சமஸ்கிருதம்" என்று ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் குறைந்தது இரு அமைச்சர்களாவது எங்களுக்கு வகுப்பெடுக்கிறார்கள். நாங்கள் தொடர்ந்து இந்தக் கேள்வியை எதிர் கொண்ட படியே இருக்கிறோம். எனவே இந்தக் கேள்விக்கு தொடர்ந்து பதில் சொல்கிறோம்.*

*சமஸ்கிருதத்தின் முதல் கல்வெட்டு கிடைத்தது கிபி 300இல். தமிழில் முதல் கல்வெட்டு கிடைத்தது அதற்கு 600 வருடத்திற்கு முன்னால். பாட்டி தான் வயதில் மூத்தவள் என்று நான் சொல்கிறேன். பேத்தி தான் மூத்த ஆள் என்று அவர்கள் சொல்கிறார்கள். நான் சொல்வது அறிவியல். நான் சொல்றது ஆறாவது அறிவு.*

*கடந்த சில நாட்களுக்கு முன்பு ஆதிச்ச நல்லூர் அகழாய்வில் தங்க ஆபரணம் கிடைத்தது. இது மிக முக்கியமான கண்டுபிடிப்பு. அந்த அகழாய்வினை செய்தது தமிழக தொல்லியல் துறை அல்ல, ஒன்றிய அரசினுடைய தொல்லியல் துறை. ஆனால் அகழாய்வின் மூலம் 3000 ஆண்டுகள் பழமையான தங்க ஆபரணம் கிடைத்ததை பிறகு கடந்த ஒரு வாரமாக ஒன்றிய அரசின் தொல்லியல் துறையின் இணையதளத்தில் பதிவிடவில்லை. அதுவே வட இந்தியாவில் நடைபெற்ற அகழாய்வில் இத்தகைய பொருள் கிடைத்திருந்தால், சீதையின் வளையம், திரௌபதியின் காதணி என்று எத்தனை கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கும் என்பதை நாங்கள் அறிவோம்.*

*2016ஆம் ஆண்டு மதுரைக்குப் பக்கத்தில் வைகைக் கரை கிராமம் ஒன்றில் ஒரு மாலை நேரத்தில் பெரிய புயல் காற்றோடு மழை அடித்தது. அந்த அந்த ஊர் நடுவில் இருந்த பெரிய மரம் கீழே விழுந்தது.*

*அந்த மரத்தின் உடைய வேர்ப் பகுதிக்குள் மண்ணோடு சேர்ந்து சில குட்டிப் பானைகள் இருந்தன. அதனை எடுத்து வந்து சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்படி உருட்டி விளையாடிக் கொண்டிருந்த பொழுது தங்கக் கட்டிகள் ஏழெட்டுக் கட்டிகள் இருந்தது. உடனே அதனை ஆளாளுக்கு எடுத்துச் சென்றார்கள் அதன்பிறகு காவல்துறை வந்து ஏழு கட்டிகளை பறிமுதல் செய்து உள்ளே வைத்தது. இரண்டு வருடத்திற்கு பிறகு தொல்லியல் துறை ஆய்வு செய்த பொழுது அந்த ஏழு தங்கக் கட்டிகளிலும் தமிழ் பிராமி, தமிழியில் எழுதப்பட்ட எழுத்துக்கள் இருந்தன. ஏழு தங்கக் கட்டிகளிலும் ஒரே பெயர் எழுதப்பட்டிருந்தது. மொகஞ்சதாரோ காலத்தில்கூட தங்கம் கண்டறியப்பட வில்லை. உலகத்திலேயே தங்கத்தில் 2000 ஆண்டுகளுக்கு முன்பே எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஒரே மொழி தமிழ் மொழி என்பது மிக முக்கியமானது. "சங்கத் தமிழ் மட்டுமல்ல, தங்கத் தமிழ்" என்று உரக்க முழங்குவோம். இங்கே இந்த உண்மையை பேசுவது மிக முக்கியமானது.*

*வைஷ்ணவ மதம் இந்தியா முழுவதும் இருக்கிற மதம். வைதீக மதங்களில் மிக முக்கியமானது. ஆனால் தமிழ்நாட்டு வைணவத்தில் மட்டும் ஒரு மரபு இருக்கிறது. அது என்னவென்றால் பெருமாளுக்கு முன்னால் தமிழ்ப் பாசுரங்கள் பாட வேண்டும்; பெருமாளுக்கு பின்னால் சமஸ்கிருத ஸ்லோகங்கள் கூற வேண்டும். இந்தியாவில் எந்த நிலத்திலாவது வைதீகத்தில் சமஸ்கிருதத்தை இறைவனுக்குப் பின்னாலும், சொந்த தாய் மொழியை முன்னாலும் வைத்த மரபு இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எங்கேயும் கிடையாது, இன்றைக்கு வரை இந்த மரபு தமிழகத்தில் தொடர்கிறது. ஏன் தெரியுமா? தமிழகத்தில் தான் மதம் என்ற நிறுவனம் கால்கொள்வதற்கு முன்பே மொழி என்கிற கட்டமைப்பு வலிமையாக நிலை நின்றுவிட்டது. எனவே இங்கே எந்த மதம் வந்தாலும் மொழிக்கு உரிமை கொண்டாடுகிற வேலையை முதலில் செய்தார்கள். மிக முக்கியமான செய்தி இது.*

*தமிழகத்திலே கிடைத்துள்ள மிகப் பழமையான கல்வெட்டு புள்ளிமான் கோம்பையிலே இருக்கிற கல்வெட்டு. அது அசோகன் பிராமி எழுத்துக்கு முன்பு எழுதப்பட்ட தமிழ் பிராமி எழுத்து என்று பல தொல்லியல் அறிஞர்கள் கூறுவதை நீங்கள் பார்க்கலாம். அந்த கல்வெட்டு ஒரு மாடு பிடிக்கிற சண்டையில் இறந்து போன அந்துவன் என்ற ஒரு வீரனுடைய நினைவாக அந்தக் கிராமத்து மக்கள் எழுதியுள்ள ஒரு கல்வெட்டு. அந்த கல்வெட்டிலே இருக்கிற ஒரு சொல் "கால்கோள்" என்பது. ஒரு திருமணம் நடந்தால் கால்கோள் நடுவது; ஒரு மாநாடு நடந்தால் கால்கோள் விழா நடுவது இன்றவைக்கு வரைக்கும் புழக்கத்தில் இருக்கிற சொல். இந்தச் சொல்லுக்கு ஒரு பெரும் இலக்கணத்தை எழுதியிருக்கிறார் தொல்காப்பியர். இந்தச் சொல்தான் தமிழகத்தில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிற இந்தியாவிலேயே மிகப் பழமையான பெயர் பொறிக்கப்பட்ட அந்துவன் கல்வெட்டு. அந்தக் கல்வெட்டில் இருக்கிற "கால்கோள்" என்ற சொல் சுமார் 2500 ஆண்டுகள் தொடர்ந்து மக்களிடம் இருந்து வருகிறது.*

*சில ஆண்டுகளுக்கு முன்பு பண மதிப்பிழப்பு இந்தியாவில் நடந்தது. ரூ.500, ஆயிரம் ரூபாய் நோட்டுகள் எல்லாம் செல்லாததாக ஆக்கப்பட்டு புதிதாக ரூ.500, ரூ.2000 நோட்டுகள் அச்சடித்து விநியோகிக்கப்பட்டது. அதுவரை அனைத்து ரூபாய் நோட்டு தாள்களிலும் உலகம் ஏற்றுக் கொண்ட எல்லா இடங்களிலும் புழக்கத்தில் இருக்கிற எண்கள் தான் எழுதப்பட்டது. பண மதிப்பிழப்பிற்கு பிறகு அச்சடிக்கப்பட்ட அனைத்து 500 ரூபாய் 2000 ரூபாய் நோட்டுகளிலும் தேவ நாகரி வடிவிலான எண்கள் பொறிக்கப்பட்டிருக்கிறது. ரூபாய் நோட்டுகளில் இருக்கும் எண்களை மாற்ற வேண்டும் என்றால் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று அரசியல் சாசனம் இருக்கிறது. ஆனால் சத்தமே இல்லாமல் யாருடைய இசைவையும் பெறாமல் தேவநாகரி எண்கள் அச்சடிக்கப்பட்டு நாடு முழுவதும் கொடுக்கப்பட்டுவிட்டது. இது மக்கள் புழங்குகின்ற மொழிக்கும் அதிகாரத்தின் குறியீட்டுக்கான மொழிக்கும் இடையிலே நடக்கிற போராட்டம்.*

*கடந்த தலைமுறை நடத்திய போராட்டத்தை விட மிகப்பெரிய போராட்டத்தை இந்தத் தலைமுறை நடத்த வேண்டிய இடத்தில் இருக்கிறது என்பதுதான் சமீபத்திய நிகழ்வுகள். நிச்சயம் புதிய தலைமுறைக்கான மொழியாக, வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் வினைபுரிகிற ஆற்றல் மிக்க மொழியாக தமிழ் மொழியை தகவமைக்கிற வேலையை அனைத்து நிறுவனங்களும் செய்ய வேண்டும். அதனை உலகம் முழுவதும் இருக்கிற தமிழர்கள் இன்றைக்கு உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.*

***- சு. வெங்கடேசன், நாடாளுமன்ற உறுப்பினர்* (CPM)**

## களப்பணியாளர் பயிற்சி; இடம் மாற்றப்பட்டுள்ளது

*திருச்சியில் வருகிற ஜுலை 22,23,24,25 ஆகிய தேதிகளில் முதல் நாளில் இணையதள பயிற்சி வகுப்பும், மற்ற மூன்று நாள் களப்பணியாளர்கள் பயிற்சி வகுப்பும் நடைபெறவுள்ளது. கடந்த வாரம் அறிவித்த இடம் தற்போது மாற்றப்பட்டுள்ளது.*

*திருச்சி காருண்யா நகர் "டான் பாஸ்கோ மீடியா" என்ற இடத்தில் நடைபெறவுள்ளது. தலைமைக் குழுவால் தேர்வு செய்யப்பட்ட தோழர்கள் மட்டுமே பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வார்கள்.*

**குறிப்பு :** *பேருந்து எண் 13, 45, 125 ஆகிய நகரப் பேருந்துகளில் (திருச்சி மத்திய பேருந்து நிலையம் - விராலிமலை செல்லும் பேருந்துகள்) 15 கிலோமீட்டர் தொலைவில் உள்ள நாகமங்கலம் பேருந்து நிறுத்தத்தில் இறங்கி, செல்லும் திசையின் வலதுபுறம் சுமார் 200,300 மீட்டரில் 'டான் போஸ்கோ' நிறுவனம் உள்ளது.*

*(3ஆம் பக்கத் தொடர்ச்சி)*

**பெரியார் சாகும் வரை தனித்தமிழ்நாடு கேட்டார். அவர் இறப்பதற்கு மூன்று மாதத்திற்கு முன்னால், செப்டம்பர் 17ஆம் தேதி பெரியார் பிறந்தநாளன்று விடுதலையில் ஒரு அறிக்கை எழுதினார். அதில் கூறினார், "இந்தியாவில் இருக்கும் வரை இந்து மதம் என்னை சூத்திரனாக வைத்திருக்கும். இந்தியாவில் இருக்கும் வரை இந்து மதம் என்னை பஞ்சமனாக வைத்திருக்கும். அது மட்டுமில்லை இந்தியாவில் இருக்கும் வரை என்னுடைய தமிழனுக்கு பொருளாதார வளர்ச்சி வராது, உத்தியோகத்தில் பங்கு கிடைக்காது, எந்த ஏற்றமும் இருக்காது. எனவே நான் முடிவு செய்துவிட்டேன். இன்றைக்கு கலைஞர் முதலமைச்சராக இருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகம் இதை ஏற்றுக் கொள்ளாது. அவர்கள் தங்களை மாநில சுயாட்சி என்று சுருக்கிக் கொண்டார்கள்" அய்யா எழுதுகிறார், இறுதியாக சொல்கிறார், "திராவிட முன்னேற்றக் கழகம் தன்னை மாநில சுயாட்சியோடு சுருக்கிக் கொண்டது, ஆனால் நான் சொல்கிறேன் பிரிவினை வேண்டும், தனித்தமிழ்நாடு வேண்டும், இளைஞர்களே முன்வாருங்கள், சுதந்திரத் தமிழ்நாடு தான் வேண்டும் என்று சட்டைப்பையில் பேட்ஜ் குத்திக் கொள்ளுங்கள்" என்று பெரியார் கூறினார்.**

**பெரியாரை முழுமையாக ஏற்றுக்கொண்ட நாங்கள் அதிலிருந்து விலகி ஜனநாயகத்திற்காக, இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டிற்காக சற்று விலகி, தந்தையையே ஒதுக்கி வைத்துவிட்டு இந்தியா வாழ்க என்று கூறினோம்; கூறிக்கொண்டும் இருக்கிறோம். நான் அமித்ஷாவிற்கும், பிரதமருக்கும் சொல்கிறேன், மெத்தப் பணிவன்போடு சொல்கிறேன், உங்களை பணிந்து கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன், இந்த மேடையிலே எங்களது தலைவரை வைத்துக் கொண்டு சொல்கிறேன், அண்ணா வழியில் பயணம் செய்கிறார் முதலமைச்சர், எங்களை பெரியார் வழிக்கு தள்ளிவிடாதீர்கள்.**

**தனிநாடு கேட்க எங்களை விட்டு விடாதீர்கள். மாநில சுயாட்சி தாருங்கள், அதுவரை ஓயமாட்டோம், என்று கேட்டு விடைபெறுகிறேன்.** *(நிறைவு)*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 15th July 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN